புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# நடுகல் வழிபாடு - பண்பாட்டின் எச்சங்கள்

**முனைவர் ச. மணிமேகலை**
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் – 635 601, திருப்பத்தூர் மாவட்டம்.*

*சங்க காலத்தில் வீரர்களுக்கும், மன்னர்களுக்கும் அவர்கள் இறந்த பின், நடுகல் நட்டும், வணங்கும் வழக்கம் இருந்தது. கோப்பெருஞ்சோழன், அதியமான் நெடுமான் அஞ்சி ஆகிய இரு மன்னர்களும் நடுகல் நாட்டியதை பாடல்கள் வாயிலாக அறிகின்றோம். தங்கள் மன்னனின் ஆநிரைகளை பிறர் கவர்ந்துச் செல்லும் பொழுது அதைத் தடுத்து நிறுத்தி உயிர் இறந்த வீரர்களுக்கு நடுகற்கள் நடப்பட்டன. நாட்டிய கற்களில் இறந்தவர்களின் பெயர்களையும், அவர்களது மறச் செயல்களைக் குறித்த விவரங்களையும் கூர்மையான உளியால் பொறித்தனர். ஆண்களுக்கு மட்டுமே இந்தக் கற்கள் நடப்பட்டன. பெண்களுக்கு நடுகல் நாட்டியதாக சங்க இலக்கியத்தில் குறிப்பு எதுவுமில்லை. பழந்தமிழர்கள் நடுகற்களை மிகவும் மதித்து, அவற்றை வழிபட்டனர். நடுகல் வழிபாடு தமிழர்களின் தெய்வ வழிபாட்டின் எச்சங்களாக இன்றளவும் ஆங்காங்கே காணப்படுகின்றது.*

## புறநானூற்றில் நடுகல் வழிபாடு

*நடுகற்களைச் சுற்றி வேலை நாட்டி, அவற்றில் கேடயங்களைத் தொங்க விட்டார்கள். நடுகற்களை மயில் இறகுகளாலும், மலர்களாலும் அலங்கரித்து, அவற்றின் மீது கள்ளை ஊற்றி சிறப்பித்தனர். துடி அடித்து ஆடுகளை அவற்றிற்குப் பலியாக் கொடுத்தனர் என்பதை மாங்குடி கிழார் இங்கு விவரிக்கின்றார்.*

**"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**

**ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவின் அல்லது**

***நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே”***

***(புறம் : 335, 9 – 12)***

*என்னும் பாடலடிகளில், ஒத்துப் போகாத பகைவர்களை எதிர்த்து, முன் நின்று தடுத்து ஒளியுடைய, உயர்த்திய தந்தங்களையுடைய யானைகளைக் கொன்று விட்டு வீழ்ந்தவர்களுக்கு நாட்டிய கல்லைத் தான் நாங்கள் வழிபடுவோம். நெல்லைத் தூவி வழிபடும் வேறு கடவுள் எதுவும் எங்களுக்குக் கிடையாது. நடுகல்லுக்கு அன்றைய தமிழர்கள் தந்த மரியாதையைக் குறித்துக் கூறுகின்றார் புலவர்.*

***“இல் அடு கள்ளின் சில்குடிச் சீறூர்***
***புடை நடுகல்லின் நாள் பலி யூட்டி***
***நன்னீர் ஆட்டி நெய்ந் நறைக் கொளீஇய***
***மங்குல் மாப் புகை மறுகுடன் கமழும்”***

***(புறம் : 329, 1 – 4)***

*என்னும் அடிகளில், வீடுகளில் கள்ளைச் செய்யும் சில குடிகளையுடைய சின்ன ஊரில், நடுகல்லிற்கு தினமும் படைத்து, நல்ல நீரால் அதைக் கழுவி, நறுமண எண்ணையைக் கொண்டு விளக்கு ஏற்றுவார்கள். அதன் கருமையான பெரும் புகையானது நறுமணத்தோடு தெருக்களில் கமழும். தன்னுடைய நண்பனான மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சி இறந்தப்பின் ஔவையார் மிகவும் வருந்திப் பாடுவதாக,*

***“இல்லாகியரோ காலை மாலை***
***அல்லாகியர் யான் வாழும் நாளே***
***நடுகல் பீலி சூட்டி நார் அரி***
***சிறு காலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ***
***கோடு உயர் பிறங்கு மலை கெழீஇய***
***நாடு உடன் கொடுப்பவும் கொள்ளாதோனே?”***

***(புறம் : 232)***

*என்னும் பாடலடிகளின் வாயிலாக, காலையும் மாலையும் இல்லாமல் போகட்டும்! என் வாழ் நாள் இல்லாமல் போகட்டும்! தன் நடுகல்லில் மயில் தோகையைச் சூட்டி சிறிய கிண்ணத்தில் நாரால் வடித்த மதுவை கொடுத்தால் அதை ஏற்றுக் கொள்வானா? ஓங்கிய சிகரங்களையுடைய விளங்கும் மலைகள் நிறைந்த நாட்டையே பிறர் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளாதவன். கோப்பெருஞ்சோழன் இறந்தப் பிறகு அவனுக்கு நடுகல் நட்டினார்கள். மன்னனின் நண்பரான புலவர் பொத்தியார் அப்பொழுது வருந்திய நிலையில் பாடுவதாக,*

***"நினையாக் கூற்றம் இன் உயிர் உய்த்தன்று***
***பைதல் ஒக்கல் தழீஇ அதனை***
***வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்***
***நனைந்தலை உலகம் அரந்தை தூங்கக்***
***கெடுவில் நல்லிசை சூடி***
***நடுகல் ஆயினன் புரவலன் எனவே"***

***(புறம் : 221, 8 – 13)***

*என்னும் அடிகளில், ஆராய்ந்துப் பார்க்காத கூற்றுவன் அவனது உயிரை எடுத்துக் கொண்டு விட்டான். நமக்கெல்லாம் வாரி வழங்கிய புரவலன் இறந்ததால் இந்த பெரிய உலகம் வருந்துகின்றது. குறையில்லா நல்ல புகழையுடையவன் நடுகல்லாகி விட்டான் என்று பாடியுள்ளார்.*

***இன்றைய காலக்கட்டத்திலும் பண்பாட்டின் எச்சங்களாக நடுகல் வழிபாடு***

*தமிழ்நாட்டில் நடுகல் வழியாக பல்வேறு வகையான தொல் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழரின் வீரத்தினை விளக்கும் புறத்திணை பசுக் கூட்டங்களை அடிப்படையாகக் கொண்டது. ஆ என்றால் பசு. நிரை என்றால் கூட்டம். ஆநிரை கவர்தல் தான் புறத்திணையின் அடிப்படை. வெட்சி என்பது பசுக்கூட்டங்களை கவர்வது. கரந்தை என்பது கவர்ந்த பசுக்கூட்டங்களை மீட்பதைக் குறிக்கும்.*

*கால்நடை செல்வங்களாகிய மாடு, ஆடு போன்றவையே அக்காலத்தில் செல்வங்களாக மதிக்கப்பட்டன. திருக்குறளில் ( குறள் – 400) மாடு என்ற சொல் "செல்வம்" என்று சுட்டப்படுகிறது. பசு, எருமை, ஆடு ஆகிய மூன்று விலங்குகளைக் குறித்து "தொறு" என்ற சொல்லை நம் முன்னோர்கள் கையாண்டுள்ளனர். தொறுகளை வைத்து இருந்தவர்களை செல்வந்தர்களாக கருதினர். இவைகளுக்கு அடையாளமாக கிருட்டிணகிரி மாவட்டத்தில் மரிமாணப்பள்ளி என்னும் மலைக்கிராமத்தில் ஆநிரை மீட்டலுக்கான நடுகல் கிடைத்துள்ளது.*

***கிருட்டிணகிரி மாவட்ட  மரிமானப்பள்ளி***

*சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள ஆநிரை மீட்டலுக்கான வீரத்தை மெய்ப்பிக்கும் வகையில் கிருட்டிணகிரி மாவட்டத்தில் மரிமானப்பள்ளி என்னும் மலையடிவாரப் பகுதியை ஒட்டிய இந்நடுகல் சான்றாக அமைகின்றது. தமிழ்நாடு மாநிலத்தில் கிருட்டிணகிரி மாவட்டத்தில் பருகூர் தொகுதியில் உள்ள சிறிய மலைக்கிராமம் / குக்கிராமமாகும். இந்த மரிமானப்பள்ளி ஊராகும். இது மல்லப்பாடி ஊராட்சிக்கு உட்பட்டது. கிருட்டிணகிரியில் இருந்து கிழக்கி நோக்கி 19 கி.மீ தொலைவிலும், பர்கூரில் இருந்து 5 கி.மீ தொலைவிலும் உள்ளது.*


**ஆநிரை மீட்டலுக்கான நடுகல்**

*பழங்காலத்தில் கால்நடைகள் பெரும் செல்வமாகும். அப்போது, ஆநிரைகளை கவர்ந்து செல்வோரிடமிருந்து, அவற்றை மீட்கும் போரில் இறந்த வீரனின் நடுகல்லாக இருக்கலாம். வீரன் இரு காதுகளிலும் பெரிய வளையங்கள் அணிந்துள்ளார். கழுத்தில் ஆபரணங்களையும் கொண்டையிட்டுள்ளார். இந்த அமைப்பு, பந்து போல் காட்சியளிக்கிறது. இதில், வீரன் கரந்தை பூ சூடிய வீரனாக இருக்கலாம்.*
*தொல்காப்பிய புறத்திணையில் குறிப்பிட்டது போல், இவர் கரந்தை பூச்சூடியே போரிடுகிறார் என நம்புகிறேன். மேலும், இவ்வீரன், வலது கையில் வில்லுடனும், இடது கையில் அம்புடனும் காட்சியளிக்கிறார்.*

*இடையில் கச்சையுடன் கூடிய வாளும் உள்ளது. அவ்வீரனின் இடது தலைப்பகுதியில் மூன்று மாடுகளின் பொறிப்பு உள்ளன. இப்பொறிப்பு ஆநிரை மீட்டலுக்கானது என்பது பறைச்சாற்றுவதாக அமைந்துள்ளன. வலது தலைப் பகுதியில் தேவக்கன்னியர்களின் உருவங்கள் தென்படுகின்றன. இவ்வீரன் போரிட்டு இறந்த பின் தேவக் கன்னிகளான இரம்பை, ஊர்வசி, மேனகை ஆகியோரால் தேவலோகம் (சொர்க்கம்) அழைத்துச் செல்லப்பட்டார் என்பதை விளக்குவதாக உள்ளது. மேலும் வீரனின் வலது கால் பகுதியில் பெண் பொறிப்பு ஒன்றும் உள்ளது. அப்பெண் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இடது கையை தொங்க விட்ட நிலையிலும், வலது கையில் கற்குடமும் உடன்கட்டை ஏறியதற்கான அடையாள முத்திரையோடு வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்பெண்ணானவள் தலையில் கொண்டையும், காதுகளில் குண்டலங்களும் அணிந்துள்ளாள். இப்பகுதி மக்கள் இந்நடுகல்லை சிலையப்பசுவாமி (அ) செல்லப்பசாமி என்ற பெயரில் வணங்கி வருகின்றனர். மேலும் இக்கல்லிற்கு ஆடு, மாடு, கோழிகளை பலியிட்டும், குங்குமம், மஞ்சள் இட்டும் வழிப்படுகின்றனர் இக்கல்லின் அருகிலுள்ள மரங்களில் ஆடு, மாடு, கோழிகளை பலியிட்டதற்கான சான்றுகள் உள்ளன.*



*ஆநிரை மீட்டலுக்கான நடுகல்*



காளைகளின் உருவம்





தேவகன்னிகளின் உருவங்கள்

**முடிவாக**

தமிழ் மறவர்கள் தங்களுடைய ஊரைப் பகைவர்களிடமிருந்து காப்பற்றவும் பகைவர்கள் ஆநிரை கவர்ந்த நிலையில் ஆநிரை கவர்ந்த பகைவர்களிடம் இருந்து மறவன் அல்லது மறவர்கள் ஆநிரைகளை மீட்டுப் போரில் வீர மரணம் அடைந்தனர். படை எடுத்துவரும் பகைவரிடம் இருந்து ஊரைக் காப்பாற்றிய பின்னர் வீர மரணம் எய்துகின்றான். அரசன் நலம் பெற மறவன் ஒருவன் உயிர் தியாகம் செய்கின்றான். இவ்வாறு உயிர் துறந்த வீரர்களுக்கு அவர்களைப் போற்றும் வகையில் பொது மக்களும் அரசனும் உறவினரும் நடுகல் எடுக்கின்றனர். அந்த நடுகல் அனைவராலும் வணங்கப்படுகிறது.

காலங்காலமாக வழிபாட்டில் சில நடுகற்கள் இருந்து வருகின்றன. ஆகவே நடுகல் வழிபாடு தொன்று தொட்டு இந்த மண்ணில் நிலைத்து இருந்து வருகிறது. கணவன் உயிர்நீத்தால் அவனுடைய மனைவி அவனின்றி வாழக் கூடாது என்ற எண்ணத்தில் கணவனுடன் தீயில் பாய்ந்து தானும் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு உடன்கட்டை ஏறுதல் அல்லது தீய்ப்பாய்தல் என்று பெயர். இந்த இரண்டு வகைக் கற்களும் தமிழ்நாட்டில் ஆங்காங்குக் கிடைக்கின்றன. தமிழர்களின் பண்பாட்டின் எச்சங்களாக திகழும் இந்நடுகற்களை பாதுகாத்து, அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்வது நம் அனைவரின் கடமையாகும்.

**துணை நின்ற நூல்கள்**


1. பாலசுப்பிரமணியன், கு. வே., புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
2. தகவலாளர் : மாணிக்கவேல், வயது. 23